**யாழ்ப்பாணம் மாநகர சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா

எனவும் அதன் முறைமைகள் வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்படுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் 1.6.1 ஆம் பந்தியிலுள்ள (ஊ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பு நீங்கலாக முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 67,440,028 பெறுமதியான 13 மூலதன வேலைகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகட்டிடங்களின் உறுதி ஆவணங்கள் இன்மையினால் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகள் சீராக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | வேலைகள் பூர்த்தியாக்கப்படாத 19 நிர்மாண வேலைகளுக்குரிய ரூபா 82,895,410 தொகையான மதீப்பீட்டுக் கிரயம் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | ஆவ் வேலைகளினை இவ்வருடம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | சபைக்கு உரித்தான 23 காணிகள் மற்றும் 62 வாகனங்களின் பெறுமதிகள் மீளாய்வாண்டின் இறுதிவரைக்கும் மதிப்பீடு | மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கும் சொத்துடமையிலிருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை | சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படும். | |
| (ஈ) | 16 விளம்பர பலகைகளிற்காக அறவிடப்பட வேண்டிய கட்டண நிலுவையான ரூபா 487,500 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சீராக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் உள்ளூர் அபிவிருத்தி உதவி திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 14,761,961 தொகை நிதிக்கூற்றுக்களில் அபிவிருத்தி ஒதுக்கத்தின் கீழ் சீராக்கப்பட்டு காண்பிக்கப்பட்டமையினால் வருமான மிகை அத் தொகையினால் குறைந்து காணப்பட்டிருந்தது. | -மேற்படி- | நிதிக்கூற்றுக்களைச் சரியாக தாயாரிக்க வேண்டும். |
| (ஊ) | நன்கொடையாக கிடைக்கப்பெற்ற ரூபா 5,464,800 இயந்திரம், 10 மின் தெளிகருவிகள், 7,341 நூலகப் புத்தகங்கள் மற்றும் ரூபா 1,041,890 கூட்டுமொத்த தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 2,025 நூலகப் புத்தகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 571(1),(2),(3) | 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்புக்கள் கூட்டுமொத்தம் ரூபா 3,962,259 சீர் செய்யப்பட்டிருக்கவில்லை. | இவ்வருடம் சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 418,843,362 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 333,243,645 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பாக தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 98,573,826 | 68,896,902 | 87,000,775 | 145,644,642 | 83,307,232 | 103,721,112 | 81,043,388 | 163,748,515 |
| (ii) | வாடகை | 183,340,128 | 100,899,682 | 103,765,019 | 18,811,356 | 363,631,300 | 161,774,184 | 161,752,354 | 21,676,693 |
| (iii) | உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 28,398,000 | 22,870,236 | 23,083,236 | 185,000 | 25,842,000 | 29,901,290 | 30,322,058 | 398,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 378,925,622 | 295,789,760 | 298,451,832 | 8,715,753 | 948,781,442 | 331,904,879 | 227,145,922 | 11,377,825 |
| | கூட்டுத் தொகை | 689,237,576 | 488,456,580 | 512,300,862 | 173,356,751 | 1,421,561,974 | 627,301,465 | 500,263,722 | 197,201,033 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி**<br>01 முதல் 05 வருடங்களிற்கிடையிலான பழைய நிலுவையாக காணப்பட்ட ரூபா 145,644,642 ஆன ஆதனவரி நிலுவையாக விடப்பட்டிருந்தன. | நடுக்கட்டு உத்தியோகத்தர்கள் மூலமாகவும் நடமாடும் சேவையினூடாகவும் சேகரிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிலுவை வருமானங்களை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **வாடகை**<br>மீளாய்வாண்டில் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 11,094,069 கடை வாடகை மற்றும் ரூபா 7,719,669 சந்தை குத்தகை நிலுவைகள் | அறவிடுவதற்கு சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டிருந்தன. இதில் வாடகை நிலுவை ரூபா 47,340 மற்றும் குத்தகை நிலுவை ரூபா 7,719,669 ஆகியன 05 வருடங்களிற்கு மேற்பட்டதாக காணப்பட்டிருந்தன. | | |
| (இ) | **அனுமதிபத்திரக் கட்டணம்**<br>06 தொலைத்தொடர்பு கோபுரங்களிற்கான ரூபா 1,955,000 ஆன வருடாந்த அனுமதிபத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஆலோசகரது அறிக்கை பெறப்பட்ட பின்னர் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | **ஏனைய வருமானம்**<br>மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 1,426,533 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 364,089 தொகை 5 வருடங்களிற்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் 65 பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறிவிப்புக் கடிதங்கள் மற்றும் நடமாடும் சேவையினூடாகவும் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிலுவை வருமானம் அறவிடப்படுதல் வேண்டும். |
| (உ) | **நீதிமன்ற தண்டப்பணம்**<br>மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2023 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 5,010,696 ஆகும். | இவ்வருடம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவிட வேண்டிய வருமானங்களை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 05 வருடங்களிற்கு மேலாக பொதுநிதி ஒதுக்கத்தில் விளைவற்று காணப்படும் ரூபா 373,562,914 தொகையினை குறித்த நோக்கங்களிற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டங்களிற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியினை குறித்த நோக்கங்களிற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்த கடந்த 05 தொடக்கம் 27 ஆண்டுகள் பழைய 30 முற்பணம் கூட்டுமொத்தம் ரூபா 6,883,066 மீளாய்வாண்டின் இறுதிவரைக்கும் அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்யப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | முற்பணங்கள் தீர்ப்பனவு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 160 கடைகளின் வாடகை உடன்படிக்கை 03 தொடக்கம் 11 வருடங்களிற்கு மேலாக மீள புதுப்பிக்கப்படாமல் வாடகை அறவிடப்பட்டு வருகின்றன. | உடன்படிக்கை புதிப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | உடன்படிக்கையினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 12 இறைச்சிக்கடைகள், 04 பல்பொருள் வாணிபம், ஒரு சந்தை மற்றும் ஒரு விளம்பர ஒலிபரப்புச் சேவை என்பவற்றை வாடகைக்கு விடப்படாமையினால் சபைக்கு ரூபா 5,487,857 ஆன வருமான இழப்பொன்று ஏற்பட்டிருந்தது. | கேள்வி கோரப்பட்டிருந்தும் வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு எவரும் முன்வரவில்லை. | பொருத்தமான நடவடிக்கைகளினை மேற்கொண்டு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 01 தொடக்கம் 10 வருடங்களாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டிருந்த 55 வாகனங்கள் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்துவதற்கோ அல்லது நீக்குவதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை சொத்துடமையிலிருந்து நீக்குவதற்கும் திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | சொத்துக்கள் பயன்பாடின்றி வைக்கப்படாதிருத்தல் வேண்டும். |
| (ஆ) | 22 எண்ணிக்கையான காணிகள் மற்றும் நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த 26 வாகனங்கள் நாளதுவரை சபைக்குரித்தற்ற நிலையில் பயன்படுத்தப்பட்டிருந்தன. | தொடர்புபட்ட ஆவணங்கள் காணப்படாமையினால் உரிமைமாற்றம் செய்ய முடியாதுள்ளது. | சபையின் பெயரிற்கு உரிமைமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தி இற்கு முரணாக சபைக்கு உரித்தற்றிருந்த காணிகளில் மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 16,635,383 கிரயத்தில் சந்தை மற்றும் கலாச்சார மண்டபங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. | சபைக்கு பாரதீனப்படுத்துவது தொடர்பாகவும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | சொத்துக்களின் உரிமையினை தாமதமின்ற தீர்க்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | குருநகர் சந்தைக்கடை தொகுதியில் அமைந்துள்ள 41 கடைகள் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்துவதற்கு 07 வருடங்களாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடை நடாத்த பொருத்தமான வசதிகள் காணப்படாமையினால் திருத்தம் செய்யப்படவில்லை. | சொத்துக்கள் பயன்பாடின்றி வைக்கப்படாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சபையின் நவீன சந்தையின் மேற்றளத்தில் 2017 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 02 மண்டபங்கள் நாளதுவரை பயன்படுத்தப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கேள்வி கோரப்பட்டிருந்தும் வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு எவரும் முன்வரவில்லை. | குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 46 பதவிகளில் 398 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தன. | உரியதரப்பினருக்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. | ஆளணி வெற்றிடங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அனுமதிக்கப்பட்ட ஆளணியினரிற்கு மேலதிகமாக 2014 ஆம் ஆண்டு 10 சுகாதார தொழிலாளிகள் மற்றும் 08 பெண் பரிசாரர்கள் சபையினால் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அத்தகைய ஆளணியினர் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் கடந்த 09 ஆண்டுகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக ஆளணி அனுமதி கோரல் விடுக்கப்பட்டுள்ள போதும் அதற்கான அனுமதி இதுவரை கிடைக்கப்பெறவில்லை. | சட்டங்கள், விதிகளுக்கமைய ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | ஓய்வு பெற்ற, இறந்த மற்றும் பதவி வெறிதாக்கப்பட்ட செய்யப்பட்டிருந்த 163 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 1,915,467 கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக அறவிடு செய்வதற்கு தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரகாரம் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் நிலுவை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தாயாரிக்கப்பட்டிருந்த பாதிட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவீனம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 05 வருமான விடயங்களில் 14 சதவீதம் முதல் 51 சதவீதம் வரையிலும் 05 செலவின விடங்களில் 17 சதவீதம் முதல் 37 சதவீதம் வரையும் விலகல்களும் ஒரு மூலதனச் செலவின விடயத்தில் 47 சதவீதமான விலகலும் இருந்ததாலும் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவைப்பாடு இனங்காணப்பட்டு கவனத்துடன் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்காக இலக்குகள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர் செய்யப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |